# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | : O.S.No. 11 of 2021 | **CNR No.** | : TNKI13-000009-2021 |
| **Name** | : குமரேசன் | **Father's Name** | : செங்கோடன் |
| **Witness for** | : Plaintiff | **Calling** | : PW1 |
| **Age** | : 26 | **Village** | : காரப்பட்டு |
| **Taluk** | : ஊத்தங்கரை | **District** | : கிருஷ்ணகிரி |
| **Start Time** | : 1:00 PM | **End Time** | : 1: 25 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 20.03.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களது சொத்தில் எங்களது அனுமதி இல்லாமல் அளக்கவோ, சாலை அமைக்கவோ கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். சரியாக அளந்து சாலை அமைக்க ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது, எங்களுக்கு அதில் பாத்தியம் உள்ளது. எந்த சர்வே எண்ணில் பாதை உள்ளது என்றால் **சர்வே எண்கள். 76, 50, 51, 55, 69** ஆகிய சொத்துக்களில் எங்களுக்கு பாத்தியம் உண்டு. எந்த சர்வே எண்ணில் வழி செல்கிறது என்றால் **சர்வே எண் 76/1டி, 50/4ஏ, 50/3பி, 51/2சி2, 55/1டி, 70/3, 69/2ஏ** ஆகிய சர்வே எண்களில் செல்கிறது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு நீள அகலத்தில் பாதை செல்கிறது என்றால் சரியாக தெரியாது. மேற்படி நீள அகல அளவுகளை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

(2) எந்த தேதியில் நான் சொல்வது போல் 9ம் பிரதிவாதி பாதை அமைக்க முற்பட்டார் என்றால் ஜனவரி 2021 ஆகும். நான் சொல்லும் பாதையை யார் யார் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் நானும் எனது பெரியப்பாவும் பயன்படுத்துவோம் சில ஊர்காரர்களும் பயன்படுத்துவார்கள். நான் சொல்லும் பாதை தற்போது என்னவாக உள்ளது என்றால் தார் சாலையாக உள்ளது. எப்போது தார் சாலை அமைத்தார்கள் என்றால் ஜனவரி 2021 க்கு பிறகு அமைத்தார்கள். எனது வழக்குரையில் தார் சாலையை அகற்ற சொல்லி பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை, பத்திரத்தை ரத்து செய்யவும் அனுமதி இல்லாமல் தார் சாலை அமைத்தது தவறு என்று தான் தாக்கல் செய்துள்ளேன்.

(3) 2021ம் ஆண்டிலேயே தார் சாலை அமைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த தார் சாலையை நான் தற்போது வரை பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். தார் சாலை அகற்ற பரிகாரம் கோராததால் வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தார் சாலையில் தான் நானும் பிரதிவாதிகளும், ஊர்காரர்களும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் வேறு இரண்டு, மூன்று வழிகளையும் பயன்படுத்தி வருகிறோம், இந்த தார் சாலையையும் பயன்படுத்தி வருகிறோம். தார் சாலை அமைப்பதற்கு முன்பே அந்த வழியை நாங்களும் ஊர் பொதுமக்களும் பயன்படுத்தி வந்தோம் என்றால் சரிதான்.

(4) ஊர் பொதுமக்கள் பயன்படுத்தி வருவதால் தான் பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதிக்கு நன்கொடை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்ன நீள அகலத்தில் தார் சாலை உள்ளது என்றால் 1 கி.மீ நீளத்திலும் 12 அடி அகலத்தில் தார் உள்ளது பிறகு மண்

இடமும் உள்ளது. நானும் தார் சாலையை பயன்படுத்தி வருவதால் பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த ஒரு உறுத்துக்கட்டடை பரிகாரமும் விளம்புகை பரிகாரமும் கோர முடியாது என்றால்ர சரியல்ல. வழக்கு மூலமே இல்லாமல் வழக்கு தாக்கல் செய்ததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் முன்பு இருந்த அளவுகளில் மட்டும் தான் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றும் மிகுதியாக எதுவும் அமைக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த சர்வே எண்களில் எவ்வளவு அளவிற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எதாவது அளந்தேனா என்றால் சர்வேயரை வைத்து அளக்கவில்லை. இதிலிலிருந்தே எந்த அதிகமான அளவுகளிலும் சாலை அமைக்கப்படவில்லை என்றும் நான் தான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்றும் அதனால் அவர்களுக்கு எதிராக எந்த ஒரு உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகரமும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல, எங்களுக்கும் பாத்தியம் உள்ளது.

(5) <u>**9–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிவுற்றது.**</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai